**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**STC.No. 54/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அங்காள ஈஸ்வரி** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : பாலசுப்பிரமணி |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 50/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 09.02.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

தமிழ் எனக்கு எழுத , பேச, படிக்கத் தெரியும் என்றால் சரிதான். ஆங்கிலம் எனக்கு எழுத, பேச, படிக்கத் தெரியாது. புகார் மனுவின் சாரம்சம் நான்தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன் . புகார் மனுவினை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பும் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். புகாரும், சட்ட அறிவிப்பும் ஆங்கிலத்தில் உள்ளபடியால் அதை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் அதை நான் படித்துப்பார்க்கவில்லை . வழக்கறிஞர் புகாரிலும், சட்ட அறிவிப்பிலும் உள்ள விபரத்தை எனக்கு படித்து காண்பித்தார் . என்னிடம் காட்டப்படும் Ex.P3 ஆவணமான சட்ட அறிவிப்பில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் எனக்கு 20 ஆண்டுகளாக குடும்ப பழக்கமென சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் முதல் பத்தியில் கிருஷ்ணமூர்த்தியை 5 ஆண்டுகளாக

தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல , 20 ஆண்டுகளாகத் தெரியும். 24.11.2024 ம் எதிரி என்னை நேரில் அணுகி ரூ.3,00,000/- கடன் கேட்டு, அதை தீர்க்கும் விதமாக வழக்கின் காசோலையை அன்றைய தினமே கிருஷ்ணமூர்த்தி காசோலையை நிரப்பி கொடுத்ததாக நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் 16.02.2025 ம் தேதி காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மேற்சொன்ன இரண்டு தேதிகளில் 24.11.2024 என்பது நான் பணம் கொடுத்த தேதியாகும். 16.02.2025 என்பது எதிரி காசோலை கொடுத்த தேதியாகும். 16.02.2025 ம் தேதி காசோலையை எதிரி வழங்கியதாகவும், அதே தேதியில் நான் காசோலையை வங்கியில் கலெக்சனுக்கு கொடுத்ததாக எனது தனிப்புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல, 19.02.2025 ம் தேதிதான் நான் காசோலையை வங்கியில் கலெக்சனுக்கு செலுத்தியுள்ளேன். எதிரி கிருஷ்ணமூர்த்தி அவர் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பில் அவருக்கு என்னை யாரென்று தெரியாது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . தேனி, பழனிசெட்டிபட்டியைச் சேர்ந்த என்னுடைய பெரியம்மாள் மகள் மகேஷ்வரி என்பவருடைய கணவர் அழகர்சாமி என்றால் மேற்சொன்ன நபர்கள் யாரும் எனக்குத்தெரியாது.

எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் மகேஷ்வரி எனது பெரியம்மாள் மகள் என்றும் அவருடைய கணவர் அழகர்சாமி என்றும், அவர்களுடன்தான் எதிரி 2020 ம் ஆண்டுவரை வரவு , செலவு கணக்கு வைத்திருந்ததாக எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எதிரியின் பதில் அறிவிப்பில் வழக்கு காசோலை மகேஷ்வரி என்பவருக்கு நிரப்பப்படாமல், கீழ் கையொப்பம் இடமால் கொடுத்த காசோலை என சொல்லியுள்ளார் என்றால் சரிதான் . எனது தனிப்புகாரில் இரண்டு வகையான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . முதல் வழக்கிறஞர் அறிவிப்பை அனுப்பிய தேதி தற்போது நினைவில்லை . இரண்டாவதாக அனுப்பிய அறிவிப்பு தேதி எனக்கு நினைவில்லை. மேற்சொன்ன இரண்டு சட்ட அறிவிப்புகளில் எந்த சட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் இரண்டாவது சட்ட அறிவிப்பின் அடிப்படையில் இந்த வழக்கின் தனிப்பபுகாரானது தொடுக்கப்பட்டுள்ளது. எதிரியின் மனைவியின் பெயர் வனராணி ஆவார். எதிரியின் மனைவி எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று எனக்குத்தெரியாது. வனராணியின் பெற்றோர் பெயர், ஊர் விபரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியாது.

24.11.2024 ம் தேதி அன்றைய தினமே தொழில் அவசரத்திற்காகவும், தனிப்பட்ட செலவினத்திற்காகவும் கடன் பெற்றதாக வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் 24.11.2024 ம் தேதி எதிரி மருத்துவ செலவிற்காகவும், குடும்ப செலவிற்காகவும் எதிரி பணம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 24.11.2024 ம் தேதியே கடனை கேட்டு அன்றைய தினமே காசோலையை நிரப்பி என்னிடம் கொடுத்து ரூ.3,00,000/- கடன் பெற்றார் என்றுச்சொல்லிவிட்டு அதற்கு முற்றிலும் மாறாக கடனை திரும்ப செலுத்தாததால் நான் பலமுறை கேட்டபின்பு கடந்த 16.02.2025 ம் தேதி காசோலை வழங்கியதாக எனது தனிப்புகாரிலும் , எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மாறுபட்ட தேதிகளில் எதிரி காசோலை வழங்கியதாக சொல்லியுள்ள நிலையில் எங்கு வைத்து எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் பண்ணைக்காட்டில் எனது வீட்டில் வைத்துக்கொடுத்தார்.

ரூ.3,00,000/- ஐ, ரூ.500/- தாள்களாக எதிரிக்கு கொடுத்தேன். தனிப்புகாரில் இணைத்துள்ள PROFORMA என்ற காலத்தில் கடன் பெற்ற தேதி ( Date of debt/ Legal liability ) என்ற

தேதி 24.11.2024 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை பிரச்சனை தேதி ( Date of cheque in dispute) 16.02.2025 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் , அது வங்கியில் காசோலையை அந்த தேதியில் போடுமாறு குறிப்பிட்ட தேதியாகும். என்னிடம் காட்டப்படும் Ex.P2 ஆவணத்திலும், நிரூபண வாக்குமூலத்திலும் Drawers signature differs என காசோலை திருப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் . 20.02.2025 ல் காசோலையானது திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் காசோலை திருப்பப்பட்ட விபரம் 20.02.2025 ல் எனக்குத் தெரியவந்து 21.02.2025 ம் தேதி அந்த காசோலையை வங்கியில் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான் . தனிப்புகாரில் 2 வது பத்தியில் " Signed below the magnetic marking area" என காசோலை திருப்பப்பட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வங்கியில் இருந்து வழங்கப்பட்ட குறிப்பாணையில் அத்தகைய விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

எதிரி காசோலையில் எந்தவொரு கையொப்பமும் செய்யாமல், நிரப்பாமல் மகேஷ்வரி என்பவரிடம் பொறுப்பிற்காக 2020 ம் ஆண்டு கொடுத்து வைத்திருந்த காசோலையை நான் பெற்று கையொப்பம் இடும் பகுதிக்கு கீழாக நானே கையொப்பம் செய்து காசோலையை வங்கியில் கலெக்சனுக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல . தெரியாத நபரின் காசோயை பயன்படுத்தி அதை நிரப்பி நான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளேன் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள தனிப்புகாரில் PROFORMA காலத்தில் புகார் கொடுக்கவேண்டிய இறுதிக்கெடு 13.04.2025 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கானது 15.04.2025 ல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமத்தை மனிக்ககோரும் மனு எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை . சட்ட காலவரையைத்தாண்டி தாக்கல் செய்துள்ள இந்த தனிப்புகாரானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல .

காசோலையில் உள்ள கையெழுத்தும், கையொப்பமும் எதிரியால் இடப்படவில்லை என்றால் சரியல்ல . எனது உறவினரான மகேஷ்வரி என்ற நபரை இரண்டாவதாக திருமணம் செய்த அழகர்சாமி என்பவர் பாரத ஸ்டேட் வங்கி கேசியராகவும் , அவரது மனைவி சத்துணவு அமைப்பாளராகவும் இருப்பதால் அவர்கள் எனது உறவினர்களாக இருப்பதால் அவர்கள் சார்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . எதிரியின் கையெழுத்தை மெய்பிக்கும் பொருட்டு வங்கி மேலாளரை நான் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாரா உள்ளேன். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும் , தனிப்புகாரிலும் சொல்லியுள்ளப்படி கடன் தொகை எதுவும் பெறவில்லை என்றும் காசோலை எதுவும் வழங்கவில்லை என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.09 17:17:35 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.